கூட்ட எண்.7 செங்கல்பட்டு நகராட்சி

நாள்.08 .09.2023

<u>குறள் :</u> அருமை உடைத்துஎன்று அசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்.

<u>தெளிவுரை</u>: இது செய்வதற்கு முடியாத செயல் என்று சோர்வடையாமல் இருக்க வேண்டும், இடைவிடாத முயற்சி அதைச் செய்து முடிக்கும் வலிமையைத் தரும்.

## சாதாரணக் கூட்டம்

**2023–ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 14 ஆம் தேதி ( 14.09.2023) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு செங்கல்பட்டு நகராட்சி வேதாசலம் கட்டிடத்தில் சாதாரண கூட்டம் நகரமன்ற தலைவர் திருமதி.தேன்மொழி நரேந்திரன் அவர்கள் தலைமையில் நடைபெறும். அதுசமயம் துணைதலைவர் மற்றும் நகரமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.**

8/9/23
நகரமன்றதலைவர்
செங்கல்பட்டு நகராட்சி

**பொருள் எண்– 1**

நகராட்சி ஆணையர் அவர்களின் ஜுலை மற்றும் ஆகஸ்ட்– 2023 மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**தீர்மான எண்.154 நாள்.14.09.2023**

பதிவு செய்யப்பட்டது.

**பொருள் எண்– 2**

நகர் நல அலுவலர் அவர்களின் ஜுலை மற்றும் ஆகஸ்ட்– 2023 மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**தீர்மான எண்.155 நாள்.14.09.2023**

பதிவு செய்யப்பட்டது.

**பொருள் எண்– 3**

ஜுலை மற்றும் ஆகஸ்ட்– 2023 மாதத்திற்கான வரவு செலவு கணக்கு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **ஜூலை– 2023** | **வரவு** | **செலவு** |
|---|---|---|
| | பொது நிதி மூலம் = ரூ.5,02,82,736/– | பொது நிதி மூலம் = ரூ.2,82,36,700/– |
| | குடிநீர் நிதி மூலம் = ரூ.8,22,520/– | குடிநீர் நிதி மூலம் = ரூ.53,68,353 /– |
| | கல்வி நிதி மூலம் = ரூ.3871/ – | கல்வி நிதி மூலம் = ரூ.10,806/– |
| **ஆகஸ்ட் – 2023** | **வரவு** | **செலவு** |
| | பொது நிதி மூலம் = ரூ.1,68,59,016 /– | பொது நிதி மூலம் = ரூ.1,86,15,703 /– |
| | குடிநீர் நிதி மூலம் = ரூ.8,09,467/– | குடிநீர் நிதி மூலம் = ரூ.26,87,271 /– |
| | கல்வி நிதி மூலம் = ரூ.38,675/ – | கல்வி நிதி மூலம் = ரூ.9,94,673/– |

**தீர்மான எண்.156 நாள்.14.09.2023**

பதிவு செய்யப்பட்டது.

**பொருள் எண்–4**

**பொதுப்பிரிவு–** செங்கல்பட்டு நகராட்சி பொது பிரிவில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு.ர.கபிலன் என்பவர் 01.02.2023 முதல் தன்னிச்சையாக பணிக்கு வராமல் இருந்ததால் 15 நாட்களுக்குள் பணியில் வந்து சேரும்படி தினமலர் நாளிதழில் 19.05.2023 வெள்ளி கிழமை அன்று Gameplan communications pvt.Ltd., என்ற நிறுவனத்தின் மூலம் விளம்பரம் வெளியிடப்பட்டது. மேற்படி விளம்பரத்திற்காக அந்நிறுவனம் ரூ.10,080.00–ஐ செலுத்துப்படி பில்பட்டியல் சமர்ப்பித்துள்ளது. எனவே மேற்படி தொகையை Gameplan communications pvt.Ltd., என்ற நிறுவனத்திற்கு செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. இத்தொகை செலுத்தியபின் தனியரின் ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

**அலுவலக குறிப்பு–**

மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.159/2023/சி1

**தீர்மான எண்.157 நாள்.14.09.2023**

அலுவலக குறிப்பு அனுமதி அளிக்கப்பட்டது.

**பொருள் எண்–5**

**பொது சுகாதாரப்பிரிவு–** செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட 33 வார்டுகளில் டெங்கு தடுப்பு பணியினை முன்னிட்டு பொது மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தவும், டெங்கு களப்பணியினை வீடுகள் தோரும் நடைபெறுவதனை உறுதிப்படுத்தவும், டெங்கு பற்றிய

விழிப்புணர்வு பிரசுரங்கள் (Sticker) 25000 எண்ணிக்கையிலும் வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்களில் களப்பணியினை பதிவு செய்யும் ஸ்டிக்கர் (52 வாரம் Sticker) 25000 எண்ணிக்கையில் அச்சடித்து கொள்ளவும். அதற்கு ஆகும் தோராய செலவினம் ரூ.9.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–**

அனுமதி அளிக்கலாம்.

கோப்பு எண்.1698/2023/எச்1

**தீர்மான எண்.158 நாள்.14.09.2023**

அலுவலக குறிப்பு அனுமதி அளிக்கப்பட்டது.

**பொருள் எண்–6**

**பொது சுகாதாரப்பிரிவு–** செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட 33 வார்டுகளிலும் தூய்மை பணியினை தனியார் மூலம் மேற்கொள்ள அதற்கான பணி உத்திரவு வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் இப்பணியினை மேற்கொள்ள தேவையான ஆட்களை வெளியிலிருந்து கொண்டு வந்து பணி மேற்கொள்வதாகவும் இவ்வாறு பணி மேற்கொள்ளும் பணியாளர்களை தங்க வைக்க போதிய இடம் இல்லாத காரணத்தால் பெரிய மணியக்கார தெரு பள்ளி தற்பொழுது பயன்படுத்தாத நிலையில் இருப்பதால் இங்கு அனுமதி வழங்குமாறும் அதற்கான மின் கட்டணத்தை ஒப்பந்ததாரர் தம் சொந்த செலவில் செலுத்துவதாகவும் தெரிவித்துள்ளார். ஏற்கெனவே இப்பள்ளி கட்டிடத்தினை இடித்து அங்கு பொதுமக்கள் பயன்படுத்தும் வண்ணம் விளையாட்டு மைதானம் அமைக்க வேண்டும் என 17வது வார்டு நகரமன்ற உறுப்பினர் அவர்களால் கொண்டுவரப்பட்ட பொருள் மீது நகரமன்ற தீர்மான எண்.54 நாள்.27.04.2023ல் ஆணையர் மற்றும் பொறியாளர் அவர்கள் நேராய்வு செய்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்நிலையில் மேற்கண்ட பள்ளியினை தற்காலிகமாக தனியார் நிறுவனத்திற்கு வழங்குவது குறித்து மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–**

மன்றம் முடிவு செய்யலாம்.

**தீர்மான எண்.159 நாள்.14.09.2023**

நகராட்சி நிர்வாக இயக்குனர் அவர்களின் உரிய அனுமதி பெற்று மேல் நடவடிக்கை தொடர மன்றம் தீர்மானிக்கப்பட்டது.

**பொருள் எண்—7**

**பொது சுகாதாரப்பிரிவு—** இந்நகராட்சியில் பொது சுகாதாரப்பிரிவில் நாள்தோறும் பயன்படுத்தப்பட்டு வரும் JCP இயந்திரத்தின் நான்கு டயர்கள் மிகவும் பழுதடைந்துள்ளதால் அவைகளை புதியதாக வாங்கி பொருத்தவும் இத்துடன் முன் பக்கம் பகட்டி அதன் பற்கள் பின் பக்க பகட்டி பின்புஸ் ரேடியேட்டர் அனைத்தும் மிகவும் பழுதடைந்துள்ளது. மேலும் முன்பக்க கண்ணாடியும் உடைந்து விட்டது. எனவே அனைத்தையும் புதிதாக மாற்றி, ஆயில் சர்வீஸ் செய்து தர வேண்டி பதிவு பெற்ற நிறுவனத்திடமிருந்து ஒப்பந்தப்புள்ளி பெற்று தொடர் நடவடிக்கை எடுக்க வேண்டி உள்ளதால் இதற்கு ஆகும் தோராய செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு—**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.160 நாள்.14.09.2023**

அலுவலக குறிப்பு அனுமதி அளிக்கப்பட்டது.

**பொருள் எண்—8**

**பொது சுகாதாரப்பிரிவு—** தற்போது மழைக்காலம் துவங்க உள்ள காரணத்தால் செங்கல்பட்டு நகராட்சி பகுதிகளில் வசிக்கும் பொதுமக்களுக்கு கொசு மூலம் பரவும், டெங்கு, மலேரியா, சிக்கன் குனியா போன்ற நோய்கள் வராமல் தடுக்கும் பொருட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கபசுரகுடிநீர் பவுடர் 100 கிலோ மற்றும் நிலவேம்பு கசாய பவுடர் 100 கிலோ தேவைப்படுவதால் இவற்றை வாங்கி வழங்க ஆகும் தோராய செலவினம் ரூ.1.50 இலட்சம் மதிப்பீட்டில் வாங்கி பயன்படுத்தி கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு—**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.161 நாள்.14.09.2023**

அலுவலக குறிப்பு அனுமதி அளிக்கப்பட்டது.

**பொருள் எண்—9**

**பொது சுகாதாரப்பிரிவு—** இந்நகராட்சி பகுதிகளில் உள்ள பொது மற்றும் சமுதாயக் கழிப்பிடங்கள், பேருந்து நிலையங்களில் உள்ள கழிப்பிடங்கள் ஆகியவற்றை சுத்தம் செய்து அதற்கான வாசனை மற்றும் கிருமி நாசினியாக Lemon Grass oil 100 லிட்டர் வாங்கி

தெளிக்கவும் இதற்கான தோராய செலவினம் ரூ.3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–**
மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.162 நாள்.14.09.2023**
அலுவலக குறிப்பு அனுமதி அளிக்கப்பட்டது.

**பொருள் எண்–10**

**பொது சுகாதாரப்பிரிவு–** இந்நகராட்சி பகுதிகளில் குப்பைகள் தரம் பிரிக்கப்பட்டு முறையே மக்கும் குப்பை, மக்கா குப்பைகள் என பிரித்து கையாளப்படுகிறது. இந்நிலையில் மக்கும் குப்பைகளில் பிளாஸ்டிக் கழிவுகளில் Bailing செய்ய பெரிய அளவில் Bailing machine வாங்கி பயன்படுத்த அதற்கான தோராய செலவினம் ரூ.9.90 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–**
மன்றம் அனுமதி வழங்கலாம்.
**தீர்மான எண்.163 நாள்.14.09.2023**
அலுவலக குறிப்பு அனுமதி அளிக்கப்பட்டது.

**பொருள் எண்–11**
**பொது சுகாதாரப்பிரிவு–** இந்நகராட்சி பகுதிகளில் உருவாகும் Hazardous works (napkin, diapad) ஆகியவற்றை Incinerator மூலம் எரிக்க நகராட்சி பகுதியில் உள்ள இரண்டு பகுதிகளில் உள்ள MCCக்கு இரண்டு எண்ணிக்கை தேவைப்படுவதால் அதனை வாங்கி பயன்படுத்திக் கொள்ள அதற்கான தோராய செலவினம் 4.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–**
மன்றம் அனுமதி வழங்கலாம்.
**தீர்மான எண்.164 நாள்.14.09.2023**
அலுவலக குறிப்பு அனுமதி அளிக்கப்பட்டது.

**பொருள் எண்–12**
**பொது சுகாதாரப்பிரிவு–** வரும் காலம் மழைகாலமாக இருப்பதால் பொது மக்களுக்கு தொற்று நோய்கள் தாக்க வண்ணம் பாதுகாத்திட கிருமி நாசினியாக 15 டன் பிளிச்சிங் பவுடர்

மற்றும் 25டன் சுண்ணாம்பு வாங்கி பயன்படுத்திட இதற்கான தோராய செலவினம் **9.85** இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–**

அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.165 நாள்.14.09.2023**

அலுவலக குறிப்பு அனுமதி அளிக்கப்பட்டது.

**பொருள் எண்–13**

**பொது சுகாதாரப்பிரிவு–** இந்நகராட்சி பகுதிகளில் வாழை மரத்து கழிவுகள், தென்னை ஓலைகள் மற்றும் மட்டைகள் போன்றவற்றை தூளாக அறைத்திட Shredder cum pulverizer (Tractor operated) தேவைப்படுவதினால் அதற்கான தோராய செலவினம் **9.75** இலட்சத்தில் வாங்கி பயன்படுத்திக் கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–**

மன்றம் அனுமதி வழங்கலாம்

**தீர்மான எண்.166 நாள்.14.09.2023**

அலுவலக குறிப்பு அனுமதி அளிக்கப்பட்டது.

**பொருள் எண்–14**

**பொது சுகாதாரப்பிரிவு–** செங்கல்பட்டு நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் தனியார் ஒப்பந்ததாரர் மூலம் திடக்கழிவு மேலாண்மை விதிகள் **2016**ன் படி குப்பைகள் தரம் பிரிக்கப்பட்டு தூய்மைப் பணிகள் செய்யப்பட்டு வருகிறது. இந்நிலையில் நகர் முழுவதும் ஆங்காங்கே உருவாகும் மரக்கழிவுகளை அகற்றி அரைத்து தூளாக்கி அத்தூள்களை ஈரபசையினை குறைக்க பயன்படுத்திடும் மையங்களில் உரத்துடன் கலந்து உரமாக்க wood chipper machine தேவைப்படுவதினால் அதற்கான தோராய செலவினம் **9.75** இலட்சத்திற்கு வாங்கி பயன்படுத்திக் கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–**

மன்றம் அனுமதி வழங்கலாம்

**தீர்மான எண்.167 நாள்.14.09.2023**

அலுவலக குறிப்பு அனுமதி அளிக்கப்பட்டது.

**பொருள் எண்–15**

**பொது சுகாதாரப்பிரிவு–** மழைக்காலம் துவங்க உள்ள காரணத்தால் DBC பணியாளர்கள் மூலம் வீடுகள் தோறும் கொசுப்புழு ஒழிப்பு பணிக்கு வழங்குவதற்காக டெமிபாஸ் 2% 300 லிட்டர் வாங்கி பயன்படுத்திட இதற்கான தோராய செலவினம் **ரூ.3.00** இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.168 நாள்.14.09.2023**

அலுவலக குறிப்பு அனுமதி அளிக்கப்பட்டது.

**பொருள் எண்–16**

**பொது சுகாதாரப்பிரிவு–** மழைக்காலம் துவங்க உள்ள காரணத்தால் செங்கல்பட்டு நகராட்சி 33 வார்டுகளில் முதிர்வு கொசுவால் உருவாக கூடிய டெங்கு, மலேரியா, பைலேரியா போன்ற நோய்க்கான, நோய் தடுப்பு பணிக்காக தெருக்கள் மற்றும் காலிமனைகளில் கொசுபுகை மருந்து அடிக்க மாலத்தியான் 300 லிட்டர், வாங்கி பயன்படுத்திட இதற்கான தோராய செலவினம் ரூ.3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–**

அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.169 நாள்.14.09.2023**

அலுவலக குறிப்பு அனுமதி அளிக்கப்பட்டது.

**பொருள் எண்–17**

**பொது சுகாதாரப்பிரிவு–** மழைக்காலம் துவங்க உள்ள காரணத்தால் செங்கல்பட்டு நகராட்சி 33 வார்டுகளில் முதிர்வு கொசுவால் உருவாக கூடிய டெங்கு, மலேரியா, பைலேரியா போன்ற நோய்க்கான, நோய் தடுப்பு பணிக்காக தெருக்கள் மற்றும் வீடுகளில் கொசுபுகை மருந்து அடிக்க பைரித்திரம் 600 லிட்டர் வாங்கி பயன்படுத்திட இதற்கான தோராய செலவினம் ரூ.8.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.170 நாள்.14.09.2023**

அலுவலக குறிப்பு அனுமதி அளிக்கப்பட்டது

**பொருள் எண்–18**

**பொது சுகாதாரப்பிரிவு–**செங்கல்பட்டு நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு திடக்கழிவு மேலாண்மை மற்றும் கையாளுதல் டெங்கு தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் பருவகால நோய் தடுப்பு நடவடிக்கைகள், தொற்று நோய் தடுப்பு நடவடிக்கை போன்ற அத்தியாவசிய பணிகள் 2023–24ம் நிதியாண்டிற்கு மேற்கொள்ள இருப்பதால் மன்ற தீர்மான எண். 172, நாள்.05.07.2023ல் அனுமதிக்கப்பட்ட கீழ்கண்ட பணிகளுக்கான செலவின தொகையினை காட்டிலும் கூடுதல் செலவினம் ஏற்படும் என்பதால் அதற்கான அனுமதியினை வழங்க

மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வரிசை எண் | வேலையின் பெயர் | தேவைப்படும் மொத்த தொகை | அனுமதிக்கப்பட்ட தொகை | கூடுதல் செலவினம் |
|---|---|---|---|---|
| 1 | நகராட்சி பகுதியில் அமைந்துள்ள கட்டிடங்களிலிருந்து கழிவு நீர் அகற்றும் வாடகை ஊர்தி மூலம் கழிவு நீர் அகற்றுதல் தோராய செலவினம் | 3.00 | 1.50 | 1.50 |
| 2 | MCC/OCC இரண்டு 7.00 டன் கொள்ளளவு கொண்ட பசுமை நுண்ணுயிர் உரக்கூடம், 3 சிறிய உரக்கூடங்களுக்கு தேவையான உயிரிகலவைகள் தயாரிக்க தேவைப்படும் வெல்லம், தயிர், தவிடு, உமி மற்றும் மரத்தூள்கள் வாங்கி உரம் தயாரிக்க மற்றும் உலர் கழிவு சேகரிப்பு மையத்திற்கு தேவையான பொருட்கள் வாங்கி வழங்குதல் உட்பட தோராய செலவினம் | 3.50 | 1.50 | 1.50 |

மேற்படி கூடுதல் செலவினத்தை செலவிட மன்றம் அனுமதி வழங்கலாம்.

**அலுவலக குறிப்பு–**

1. மதிப்பீடு தொகைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை 2023–24–ம் நிதியாண்டில் செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.171 நாள்.14.09.2023**

அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதி அளிக்கப்பட்டது

**பொருள் எண்–19**

**பொது சுகாதாரப்பிரிவு–**நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் வழிகாட்டுதலின் படி இந்நகராட்சியில் 33 வார்டுகளிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட வார்டு பகுதி சபா உறுப்பினர்களுக்கு வழிகாட்டுதல் புத்தகம் அச்சடித்து வழங்க மன்ற தீர்மான எண்.114, நாள்.05.07.2023ல் அனுமதி பெறப்பட்டதை தொடர்ந்து 11.08.2023ல் அன்று பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் விவரம்

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு |
|---|---|---|
| 1 | keysigns service syndicate suite A5, vasanth Appartment alwarpet. Chennai-18, 33 wards total 1683–books | Rs.5,72,220/– |
| 2 | Rajeswari offset printers 10/19 sami Achary street royapettah Chennai-14, 33 wards total 1683 Books | Rs.5,85,000/– |
| 3 | Color wings (madras) pvt ltd 10/22 weaver street Triplicane Chennai 33, wards total 1683 Book | Rs.6,25,000/– |

வரப்பெற்றுள்ள மூன்று விலைப்புள்ளிகள் மதிப்பீட்டை விட குறைந்த விலைப்புள்ளி வழங்கிய Keysigns service syndicate என்ற ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்குவதற்கு மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–**

மன்றம் அனுமதி வழங்கலாம்

ந.க.எண்.2114/2023/எச்1

**தீர்மான எண்.172 நாள்.14.09.2023**

அலுவலக குறிப்பு அனுமதி அளிக்கப்பட்டது.

**பொருள் எண்–20**

**பொறியியல் பிரிவு–** சென்னை நகராட்சி நிர்வாக ஆணையரக தலைமைப் பொறியாளர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.29033/2019/DO1, நாள்.19.02.2020 வாயிலாக செங்கல்பட்டு நகராட்சி பகுதியில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான 7 முதல் 33 வார்டுகள் தெருவிளக்குகளிலும் ஏற்படும் பழுதுகளை ஒருங்கிணைந்து சுழற்சி முறையில் பராமரிப்பு பணிகள் தனியார் மூலம் ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ள Principal Clearence மற்றும் Bid Document அனுமதி வழங்கப்பட்டது. அதற்கான செலவினங்கள் பின்வருமாறு அனுமதிக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | பணியின் விவரம் | ஆண்டு | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட 7 முதல் 33 வார்டுகளில் அமைக்கப்பட்ட நகராட்சிக்கு சொந்தமான தெரு விளக்குகளில் சுழற்சி முறையில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் | முதலாம் ஆண்டு 2020–21 | 54.00 |
| | | இரண்டாம் ஆண்டு (சதவீதம் கூடுதல்) 2021–22 | 56.70 |
| | | மூன்றாம் ஆண்டு (5 சதவீதம் கூடுதல்) 2022–23 | 59.54 |

நகராட்சி நிர்வாக ஆணையரக தலைமை பொறியாளர் அவர்களின் செயல்முறைகளில் மூன்று ஆண்டுகளுக்கு அனுமதி பெற்று முதற்கட்டமாக முதலாம் ஆண்டிற்கு ஒப்பந்தப்புள்ளிகள் பெற்று பின்பு ஒப்பந்ததாரரின் திருப்திகரமான பணியின் அடிப்படையில் அடுத்த இரண்டாம் மற்றும் மூன்றாம் ஆண்டிற்கு ஒவ்வொரு ஆண்டின் ஒப்பந்த காலம் முடிவடையாத முன் நகராட்சி நிர்வாக ஆணையரக அலுவலக அனுமதி பெற்று ஒப்பந்த காலத்தினை புதுப்பிக்க அனுமதிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட செயல்முறைகள் அடிப்படையில் தெருவிளக்கு முதலாம் ஆண்டு பராமரிப்பு பணிக்கு 12.03.2020 அன்று ரூ.54.00 இலட்சம் மதிப்பீட்டில் முதலாம் ஆண்டிற்கான ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு அதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி சமர்பித்து தொழில்நுட்ப ரீதியாக தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர் AMR Electrical Engineering Contractor வேலூர் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி நகரமன்ற தீர்மான எண்.900 நாள் 30.10.2019 வாயிலாக ஏற்கப்பட்டு 01.04.2020 ஆண்டு முதலாம் ஆண்டிற்கான (01.04.2020 முதல் 31.03.2021 வரை) பணி உத்திரவு வழங்கப்பட்டு பணி திருப்திகரமான நடைபெற்றது. மேலும் முதலாம் ஆண்டிற்கான ஒப்பந்தம் 31.03.2021 உடன் முடிவடைந்தது. மேற்கண்ட ஒப்பந்ததாரர் AMR Electrical Engineering Contractor வேலூர் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி நகரமன்ற தீர்மான எண்.1193 நாள் 29.01.2021 வாயிலாக ஏற்கப்பட்டு இரண்டாம் ஆண்டிற்கான (01.04.2021 முதல் 31.03.2022 வரை) தெருவிளக்கு பராமரிப்பு பணி உத்தரவு வழங்கப்பட்டு திருப்திகரமான நடைபெற்று வந்தது.

மேலும் இரண்டாம் ஆண்டிற்கான ஒப்பந்த 31.03.2022 வரை முடிவடைந்ததால் 01.04.2022 முதல் 30.06.2022 வரை நகர்மன்ற தீர்மான எண்.1366 நாள்.03.03.2022–ன் படி அனுமதி பெறப்பட்டு, பணி உத்தரவு மூன்று மாதங்களுக்கு நீட்டிப்பு செய்யப்பட்டது. 01.07.2022 முதல் 30.09.2022 வரை நகர்மன்ற தீர்மான எண்.128 நாள். 29.07.2022–ன் படி அனுமதி பெறப்பட்டு பணி உத்தரவு மூன்று மாதங்களுக்கு நீட்டிப்பு செய்யப்பட்டது. 01.10.2022 முதல் 31.12.2022 வரை நகரமன்ற தீர்மான எண்.209 நாள்.15.12.2022 படி அனுமதி பெறப்பட்டு, பணி நீட்டிப்பு செய்யப்பட்டது. 01.01.2023 முதல் 31.03.2023 வரை நகர்மன்ற தீர்மான எண்.262 நாள்.15.12.2022–ன் படி அனுமதி பெறப்பட்டு பணி உத்தரவு மூன்று மாதங்களுக்கு நீட்டிப்பு செய்யப்பட்டது. 01.04.2023 முதல் 30.06.2023 வரை

நகர்மன்ற தீர்மான எண்.357 நாள்.06.03.2023–ன் படி அனுமதி பெறப்பட்டு பணி உத்திரவு மூன்று மாதங்களுக்கு நீட்டிப்பு செய்யப்பட்டது. 01.07.2023 முதல் 31.07.2023 வரை ஒரு மாதத்திற்கு நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி நாள்.21.06.2023ன் படி பணி உத்தரவு ஒரு மாத காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்யப்பட்டது. மேலும் 01.08.2023 முதல் 31.08.2023 வரை ஒரு மாதத்திற்கு நகரமன்ற தீர்மான எண்.148 நாள்.31.07.2023ன் படி அனுமதி பெறப்பட்டு பணி உத்தரவு ஒரு மாதத்திற்கு நீட்டிப்பு செய்யப்பட்டது. தற்போது ஒரு மாதத்திற்கான ஒப்பந்த காலம் 31.08.2023 உடன் முடிவடைய உள்ளதால் 01.09.2023 முதல் 31.09.2023 வரை ஒரு மாதம் பணி நீட்டிப்பு செய்ய பணி உத்திரவு வழங்க ரூ.5.00 இலட்சம் மன்றத்தின் அனுமதி பெறப்பட்டு மேற்கண்ட ஒப்பந்ததாரர் AMR Electrical Engineering Contractor வேலூர் நிறுவனத்தின் மூலமாக ஒரு மாதத்திற்கான 01.09.2023 முதல் 31.09.2023 வரை நகர்மன்ற அனுமதி பெற்று ஒரு மாத காலத்திற்கு தெருவிளக்கு பராமரிப்பு பணிகளை சென்னை நகராட்சி நிர்வாக ஆணையரக தலைமைப் பொறியாளர் அவர்களின் 19.02.2020 ஆம் தேதிய செயல்முறைகள் வாயிலாக அரசு திரும்ப பெரும் வரையில் ஒரு மாத காலத்திற்கான (மூன்றாம் ஆண்டு அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகையில் ரூ.59.54/– இலட்சம்) மதிப்பீடு தொகை ரூ.5.00/– இலட்சத்திற்கு ஏற்கெனவே உள்ள ஒப்பந்த சதவீதத்தின் அடிப்படையில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–**

1. அனுமதி வழங்கலாம்.
2. பணிக்களுக்கான செலவினங்களை நகராட்சி பொது நிதிலிருந்து மேற்கொள்ளவும் Out Sourcing (or) LED Conversion Tender நடைமுறைப்படுத்தும் வரையில் ஒரு மாதம் கால நீட்டிப்பு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.
3. மன்ற ஒப்புதலை எதிர் நோக்கி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை அங்கீகரிக்கலாம்.

ந.க.எண்.0446/2022/இ2

**தீர்மான எண்.173 நாள்.14.09.2023**

அலுவலக குறிப்பு 1 முதல் 3 வரை அனுமதி அளிக்கப்பட்டது.

**பொருள் எண்–21**

**பொறியியல் பிரிவு–** செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட பழவேலி, மாமண்டூர் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள இரண்டு 160KV ஜெனரேட்டர் நீரேற்று நிலையம் அருகில் உள்ளதால் மழை மற்றும் வெயில் காலங்களில் ஜெனரேட்டர் மேல் பகுதி சேதம் அடைந்து உள்ளது. ஆகையால் இந்த இரண்டு ஜெனரேட்டர் மேல் பகுதியில் நிழற்குடை அமைக்கும் பணிக்கு தோராய மதிப்பீடு ரூ.2.50/– இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.1918/2023/இ1

**தீர்மான எண்.174 நாள்.14.09.2023**

அலுவலக குறிப்பு அனுமதி அளிக்கப்பட்டது.

**பொருள் எண்–22**

**பொறியியல் பிரிவு–** செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட பழவேலி தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள 160 KV ஜெனரேட்டர் பழுதடைந்து உள்ளது. அவற்றை சரி செய்து இயக்கும் பணிக்கு தோராய மதிப்பீடு ரூ.0.80/– இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.1919/2023/இ1

**தீர்மான எண்.175 நாள்.14.09.2023**

அலுவலக குறிப்பு அனுமதி அளிக்கப்பட்டது.

**பொருள் எண்–23**

**பொறியியல் பிரிவு–** செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட காஞ்சிபுரம் High road , பாசித்தெரு, களத்தூரான் கால்வாய் பகுதியில் சேதமடைந்த குடிநீர் பிரதான குழாய், பகிர்மான குழாய் வேதாசலம் நகர் பைப் லைன் அடைப்பு மற்றும் புதியதாக வால்வு மாற்றும் பணிக்கு தோராய மதிப்பீடு ரூ.6.40/–இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.176 நாள்.14.09.2023**

அலுவலக குறிப்பு அனுமதி அளிக்கப்பட்டது.

**பொருள் எண்–24**

**பொறியியல் பிரிவு–** செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட மாமண்டூர் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள குளோரின் திரவம் சிலிண்டர் மூலம் குடிநீரில் கலந்து பொது மக்களுக்கு வினியோகம் செய்யப்பட்டு வருகிறது. கடந்த 18.08.2023 இரவு 3.00 மணி அளவில் கேஸ் சிலிண்டர் கசிவு ஏற்பட்டு மோட்டார் இயக்க முடியவில்லை மற்றும் கேஸ் சிலிண்டர் நீரேற்றும் நிலையத்தின் அருகில் இருப்பதால் அவற்றை பராமரிக்க இயலவில்லை,

ஆகையால் அவற்றை பாதுகாத்து தனி அறையில் அமைக்கும் பணிக்கு தோராய மதிப்பீடு ரூ. 8.00/– இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.1920/2023/இ1

**தீர்மான எண்.177 நாள்.14.09.2023**

அலுவலக குறிப்பு அனுமதி அளிக்கப்பட்டது.

**பொருள் எண்–25**

**பொறியியல் பிரிவு–** செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட நகராட்சி அலுவலகத்தில் அவ்வப்பொழுது ஏற்படும் பழுதுகளை சரிசெய்யவும், இதற்கான உபகரணங்கள் கொள்முதல் செய்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ள 1 ஆண்டு பராமரிப்பு பணிக்கான தோராய மதிப்பீடு ரூ.5.00/– இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்து மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.178 நாள்.14.09.2023**

அலுவலக குறிப்பு அனுமதி அளிக்கப்பட்டது.

**பொருள் எண்–26**

**பொறியியல் பிரிவு–** செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.20 ல் உள்ள முருகேசனார் தெரு, நாஸிம் பாய் பிரியாணி கடை சந்தில் உள்ள போர் பழுதடைந்து உள்ளதால், புதியதாக போர் அமைத்தும் மற்றும் பழுதடைந்துள்ள சின்டெக்ஸ் டேங்கை அகற்றி விட்டு புதியதாக டேங்க் அமைக்கும் பணிக்கு தோராய மதிப்பீடு ரூ.3.30/– இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.179 நாள்.14.09.2023**

அலுவலக குறிப்பு அனுமதி அளிக்கப்பட்டது.

**பொருள் எண்–27**

**பொறியியல் பிரிவு–** செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.20 ல் உள்ள காந்தி சாலைக்கும், முருகேசனார் தெருவிற்கும் நடுவில் உள்ள கிணற்றை சுத்தப்படுத்தி, சிறிய மின்மோட்டார் மற்றும் சின்டெக்ஸ் டேங்க் பொருத்தி அமைக்கும் பணிக்கு தோராய மதிப்பீடு ரூ.5.00/– இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.180 நாள்.14.09.2023**

அலுவலக குறிப்பு அனுமதி அளிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்–28</u>**

**பொறியியல் பிரிவு–** செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் நிதியின்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டது. அப்பணிகள் 18.08.2023 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் பின்வருமாறு.

<table>
<tr><th>வ. எண்.</th><th>வேலையின் பெயர்</th><th>மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்)</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்தப் புள்ளி விலை விகிதம்</th></tr>
<tr><td rowspan="2">1</td><td rowspan="2">செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.32,18,9 மற்றும் இதர பகுதிகளில் உள்ள குடிநீர் வால்வு தொட்டிகளை அமைக்கவும், ஏற்கனவே உள்ள வால்வு தொட்டிகளில் பழுதுகளை மேற்கொள்ளவும் மற்றும் வால்வு தொட்டிகளுக்கு cover slab அமைக்கும் பணி.</td><td rowspan="2">ரூ.3.60/–</td><td>திருவாளர்.Appollo Enterprices</td><td>0.02% மதிப்பீட்டை விட குறைவு</td></tr>
<tr><td>திருவாளர்.Anand Enterprices</td><td>0.10% மதிப்பீட்டை விட அதிகம்</td></tr>
<tr><td rowspan="2">2</td><td rowspan="2">செங்கல்பட்டு நகராட்சிக்கு சொந்தமான பழவேலி தலைமை நீரேற்றும் நிலையத்தின் தட்டான்மலை திட்டத்தில் கூடுதலாக 30 HP மின்மோட்டார்கள் மற்றும் கேபிள், ஹோஸ் பைப் புதியதாக அமைக்கும் பணி.</td><td rowspan="2">ரூ.1.10/–</td><td>திருவாளர்.Appollo Enterprices</td><td>0.14% மதிப்பீட்டை விட குறைவு</td></tr>
<tr><td>திருவாளர்.Anand Enterprices</td><td>0.16% மதிப்பீட்டை விட அதிகம்</td></tr>
<tr><td rowspan="2">3</td><td rowspan="2">செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியினை பழவேலி மற்றும் மாமண்டூர் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள தரைமட்ட தொட்டி மற்றும் மேல்நிலைத்தொட்டி மற்றும் செங்கல்பட்டு நகரின் பிரதான மேல்நிலை தொட்டியில் Flow meter, meter gause மற்றும் pressure guase meter அமைத்து நீர்வரத்து சரிசெய்யவும் இவை குடிநீர் அத்தியாவசிய பணி என்பதால் , இதனை அமைக்கும் பணி.</td><td rowspan="2">ரூ.7.75/–</td><td>திருவாளர்.Appollo Enterprices</td><td>0.01% மதிப்பீட்டை விட குறைவு</td></tr>
<tr><td>திருவாளர்.Balaji Enterprices</td><td>3.28% மதிப்பீட்டை விட அதிகம்</td></tr>
</table>

| | | | | |
|---|---|---|---|---|
| 4 | செங்கல்பட்டு நகராட்சிக்கு சொந்தமான மாமண்டூர் தலைமை நீரேற்றும் நிலையத்தில் பம்பு ரூம் அருகில் உள்ள தரைமட்ட தொட்டி 1.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு குடிநீர் நிரப்பப்பட்டு சம்பிலிருந்து 60 HP மின்மோட்டார்கள் மூலமாக குடிநீர் நகரின் பிரதான மேல்நிலை தொட்டிகள் நிரப்பப்படுகின்றது. மேலும் HP Standby motor காயில் பழுது ஏற்பட்ட காரணமாகவும், ஒரே மின்மோட்டாரினை தொடர்ந்து இயக்க முடியாத சூழ்நிலை காரணமாகவும், குடிநீர் அத்தியாவசிய பணி என்பதாலும் 60 HP மின்மோட்டாருக்கு புதியதாக காயில் மராமரத்து மேற்கொள்ளும் பணி. | ரூ.1.18/- | திருவாளர். K.Rajakopalan | 0.01% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | திருவாளர்.Appollo Enterprices | 2.50% மதிப்பீட்டை விட அதிகம் |
| 5 | செங்கல்பட்டு நகராட்சிக்கு சொந்தமான பழவேலி தலைமை நீரேற்று நிலையத்தில் பாலாற்று படுகையில் உள்ள உறிஞ்சு கிணறுகள் மற்றும் ஆழ்துளை கிணறுகள் மின் மோட்டார் மூலம் குடிநீர் கொண்டு வரப்பட்டு சம்ப் நிரப்பப்படுகிறது. மேலும் சம்பில் உள்ள குடிநீர் தினந்தோறும் குளோரின் கலவை கலக்கப்பட்டு நகரின் பிரதான மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளில் நிரப்பப்படுகிறது. எனவே அப்பகுதியில் குளோரின் கேஸ் சிலிண்டர் சப்ளை செய்யும் பணி. | ரூ.6.80/- | திருவாளர்.Appollo Enterprices | 0.02% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | திருவாளர்.Anand Enterprices | 2.23% மதிப்பீட்டை விட அதிகம் |
| 6 | செங்கல்பட்டு நகராட்சிக்கு சொந்தமான மாமண்டூர் தலைமை நீரேற்று நிலையத்தில் பாலாற்று படுகையில் உள்ள உறிஞ்சு கிணறுகள் மற்றும் ஆழ்துளை கிணறுகள் மின் மோட்டார் மூலம் குடிநீர் கொண்டு வரப்பட்டு சம்ப் நிரப்பப்படுகிறது. மேலும் சம்பில் உள்ள குடிநீர் தினந்தோறும் குளோரின் கலவை கலக்கப்பட்டு நகரின் பிரதான மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளில் நிரப்பப்படுகிறது. எனவே அப்பகுதிக்கு குளோரின் கேஸ் சிலிண்டர் சப்ளை அமைக்கும் பணி. | ரூ.3.40/- | திருவாளர்.Appollo Enterprices | 0.02% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | திருவாளர்.Anand Enterprices | 2.23% மதிப்பீட்டை விட அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 7 | செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பாசித் தெரு நீர்த்தேக்க தொட்டி, பெரிய மணியக்கார தெரு நீர்தேக்க தொட்டி K.K. பூஸ்டர், ரேடியோமலை நீர்த்தேக்க தொட்டி, சப்–கலெக்டர் பங்களா நீர்த்தேக்க தொட்டி மற்றும் தட்டான்மலை (வடமலை பள்ளி அருகில்) உள்ள தரைமட்ட மற்றும் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளில் நீர்நிரப்பும் பணிகள் மேற்கொள்ளும் மின்மோட்டார்கள், கேபிள்கள், வால்வுகள், GI & HDPE பைப்லைன்கள், மெயின் ஸ்விட்ச், Service wireகள் மற்றும் மின்கேபிள்களில் ஏற்படும் பழுதுகளை சரி செய்யும் பணி. | 6.80/– | திருவாளர்.Appollo Enterprices | 0.01% மதிப்பீட் டை விட குறைவு |
| | | | திருவாளர்.Anand Enterprices | 1.67% மதிப்பீட் டை விட அதிகம் |
| 8 | செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.12ல் உள்ள ஜீவானந்தம் தெருவில் பைப்லைன் அமைக்கும் பணி. | ரூ.3.60/– | திருவாளர். Balaji Enterprices | 0.02% மதிப்பீட் டை விட குறைவு |
| | | | திருவாளர்.Appollo Enterprices | 1.37% மதிப்பீட் டை விட அதிகம் |
| 9 | செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட பழவேலி தலைமை நீரேற்றும் நிலையத்தில் உள்ள ரேடியோமலை நீர்த்தேக்க தொட்டி பம்பு ரூமில் உள்ள ஆழ்துளை கிணறு (Bore well) மற்றும் உறிஞ்சு கிணறுகளில் உள்ள HDPE பைப் லைன் மற்றும் கேபிள்கள், வால்வுகளில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரிசெய்து பராமரிக்கும் பணி. | ரூ.12.00/– | திருவாளர்.Appollo Enterprices | 0.02% மதிப்பீட் டை விட குறைவு |
| | | | திருவாளர். Anand Enterprices | 0.08% மதிப்பீட் டை விட அதிகம் |
| 10 | செங்கல்பட்டு நகராட்சிக்கு சொந்தமான மாமண்டூர் தலைமை நீரேற்றும் நிலையத்திலிருந்து பாலாறு படுகையில் உள்ள 10 ஆழ்துளை கிணறு மூன்று உறிஞ்சு கிணறு மின்மோட்டார் மூலமாக 60 HP Starter, EP மெயின் ஸ்விட்ச், carier, HDPE பைப்லைன், கேபிள்கள் மற்றும் capacitor பழுதுகள் ஏற்படுவதை உடனுக்குடன் சரிசெய்யும் பணி. | ரூ.12.00/– | திருவாளர். Balaji Enterprices | 0.04% மதிப்பீட் டை விட குறைவு |
| | | | திருவாளர். Appollow Enterprices | 0.15% மதிப்பீட் டை விட அதிகம் |
| 11 | செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 20–ல் உள்ள காந்தி சாலையில் இருந்து கற்பூர செட்டிகுளக்கரை வரை பைப் லைன் அமைக்கும் பணி. | ரூ.5.00/– | திருவாளர்.Appollo Enterprices | 0.05% மதிப்பீட் டை விட குறைவு |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | திருவாளர். Anand Enterprices | 0.11% மதிப்பீட் டை விட அதிகம் |
| 12 | செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 1ல் உள்ள களத்துமேடு தந்தை பெரியார் நகரில் சிறு மின்விசை பம்பு சின்டெக்ஸ் மாற்றி அமைக்கும் பணி. | ரூ.1.75/– | திருவாளர்.Appollo Enterprices | 0.04% மதிப்பீட் டை விட குறைவு |
| | | | திருவாளர். Anand Enterprices | 0.13% மதிப்பீட் டை விட அதிகம் |
| 13 | செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 24– ல் உள்ள அங்கமுத்து தியேட்டர் சாலையில் பைப்லைன் அமைக்கும் பணி. | ரூ.5.00/– | திருவாளர். MSD Construction | 0.02% மதிப்பீட் டை விட குறைவு |
| | | | திருவாளர். G.Rajesh | 1.76% அதிகம் |
| 14 | செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.25 வீரகுடி வேளாலர் தெருவில் புதியதாக குடிநீர் பகிர்மான குழாய் அமைக்கும் பணி. | ரூ.6.40/– | திருவாளர்.Appollo Enterprices | 0.06% மதிப்பீட் டை விட குறைவு |
| | | | திருவாளர். Anand Enterprices | 12.89% மதிப்பீட் டை விட அதிகம் |
| 15 | செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.22, மா.பொ.சி தெருவில் பைப் லைன் பழுதடைந்து உள்ளதால் புதியதாக பைப் லைன் அமைக்கும் பணி. | ரூ.4.60/– | திருவாளர்.Appollo Enterprices | 0.03% மதிப்பீட் டை விட குறைவு |
| | | | திருவாளர். Anand Enterprices | 12.05% மதிப்பீட் டை விட அதிகம் |
| 16 | செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.29ல் உள்ள மதுரை வீரன் கோவில் தெருவில் பைப் லைன் பழுதடைந்து உள்ளதால் அதனை மாற்றி புதியதாக பைப் லைன் அமைக்கும் பணி. | ரூ.3.50/– | திருவாளர். MSD Construction | 0.02% மதிப்பீட் டை விட குறைவு |
| | | | திருவாளர். G.Rajesh | 1.37% மதிப்பீட் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | டை விட அதிகம் |

பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர்களுக்கு பணி உத்திரவு வழங்க ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.951/2023/இ1

**தீர்மான எண்.181 நாள்.14.09.2023**

அலுவலக குறிப்பு அனுமதி அளிக்கப்பட்டது.

**பொருள் எண்–29**

**பொறியியல் பிரிவு–** செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் நிதியின்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டது. அப்பணிகள் 18.08.2023 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் பின்வருமாறு.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட மாமண்டூர் தலைமை நீரேற்று நிலையத்தில் ஆற்றுப்படுகையில் உள்ள நீராதார கிணற்றில் இருந்து புதியதாக மின் மோட்டார், கேபிள், HDPE pipe அமைக்கும் பணி. | ரூ.24.90/– | திருவாளர். k.ராஜகோபாலன் | 0.02% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | திருவாளர்.Appollo Enterprices | 0.10% மதிப்பீட்டை விட அதிகம் |

பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர்களுக்கு பணி உத்திரவு வழங்க ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.951/2023/இ1

**தீர்மான எண்.182 நாள்.14.09.2023**

அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதி அளிக்கப்பட்டது.

**பொருள் எண்–30**

**பொறியியல் பிரிவு–** செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பொதுநிதியின் படி நிர்வாக அனுமதி பெறப்பட்டது. அப்பணிகள் 18.08.2023 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் பின்வருமாறு.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.31 செங்கல்பட்டு அரசு பொது மருத்துவமனை முன்புறம் உள்ள சிதலமைடைந்த பேருந்து நிலையத்தை இடித்து அப்புறப்படுத்தும் பணி. | ரூ.0.50/– | திருவாளர் S.செந்தில்வேல் | 0.01% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | திருவாளர்.G.ராஜேஷ் | 0.38% மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | செங்கல்பட்டு நகராட்சி அலுவலகத்தில் இயங்கி வரும் அனைத்து கணினி மற்றும் அதன் சம்மந்தமான பிரிண்டர் மற்றும் UPS Network switch அனைத்திற்கும் ஆகஸ்ட் 2023 முதல் ஜூலை 2024 வரை ஒரு ஆண்டிற்கான பராமரிப்பு செய்யும் பணி. | ரூ.1.50/– | திருவாளர். MS Technologies | 0.02% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | திருவாளர்.Balaji Enterprices | 0.4% மதிப்பீட்டை விட அதிகம் |
| 3 | செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.25, அண்ணா நகர் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள சமுதாய கழிப்பிடத்திற்கு வண்ணப்பூச்சு பணி, front elevation பணி, முன்பக்க Grill கதவுகள் மற்றும் இதர பணிகளை மேற்கொள்ளும் பணி. | ரூ.6.15/– | திருவாளர். K.வெங்கடேசலு | 0.18% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | திருவாளர்.G.ராஜேஷ் | 0.74% மதிப்பீட்டை விட அதிகம் |
| 4 | செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட சமுதாய மற்றும் பொது கழிப்பிடங்களுக்கு SBM 2.0 மற்றும் ODF+ சான்று பெற ஆய்வு செய்து மதிப்பீடு வழங்கப்பட உள்ளது. SBM 2.0 | ரூ.3.50/– | திருவாளர். S.செந்தில்வேல் | 0.01% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | திருவாளர். K.வெங்கடேசலு | 1.65% மதிப்பீட்டை |

| | | | | |
|---|---|---|---|---|
| | வழிகாட்டு நெறிமுறைகளின் படி, QR code, மின்வசதி கதவு, தண்ணீர், வாஸ்பேசன் உள்ளிட்ட வசதிகளை மேற்கொள்ள நகராட்சி பொது சுகாதார பிரிவில் பெறப்பட்ட குறிப்பை தொடர்ந்து, வடமலை பகுதி கழிப்பிடத்தை தவிர்த்து அனைத்து கழிப்பிடங்களிலும் QR code fibre board பொருத்தவும் மற்றும் இதர அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் பணி. | | | விட அதிகம் |
| 5 | செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.33, ஏழாவது குறுக்கு தெருவில் உள்ள சிறுபாலம் பழுதடைந்து உள்ளதால் இரயில்வே கால்வாய்க்கு செல்லாமல் ஏழாவது குறுக்கு தெருவில் உள்ள குடியிருப்புகளுக்கும் பிரதான சாலையில் உள்ள குடியிருப்புகளுக்கும் மழைநீர் செல்வதால் பொதுமக்களுக்கு இடையூறாக இருப்பதால் மழைநீர் வடிகால்வாயும், சிறுபாலமும் அமைக்கும் பணி. | ரூ.6.00/– | திருவாளர். K.வெங்கடேசலு | 0.23% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | திருவாளர்.G.ராஜேஷ் | 0.29% மதிப்பீட்டை விட அதிகம் |
| 6 | செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளுக்கு குடிநீர் வழங்கும் பழவேலி நீரேற்று நிலையத்தில் குடிநீர் லாரி நீர் பிடிக்கும் தளம் சேதமடைந்து உள்ளதால் குடிநீர் லாரி நீர்பிடிப்பதில் சிரமம் ஏற்படுகிறது. எனவே அப்பகுதியினை சிமெண்ட் கான்கீரிட் கொண்டு தளம் அமைக்கும் பணி. | ரூ.1.50/– | திருவாளர். K.வெங்கடேசலு | 1.22% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | திருவாளர்.G.ராஜேஷ் | 0.12% மதிப்பீட்டை விட அதிகம் |
| 7 | செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 25 –ல் உள்ள திருக்கழுக்குன்றம் | ரூ.7.50/– | திருவாளர். S.செந்தில்வேல் | 0.02% மதிப்பீட்டை விட |

| | | | | |
|---|---|---|---|---|
| | மேம்பாலம் எதிரில் சிறுபாலம் மற்றும் மழைநீர் வடிகால் அமைத்தல் பணி. | | | குறைவு |
| | | | திருவாளர். K.வெங்கடேசலு | 1.00% மதிப்பீட்டை விட அதிகம் |
| 8 | செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.15ல் உள்ள புதிய பேருந்து நிலையத்தில் உள்ள தாய்மார்கள் பாலூட்டும் அறையில் உள்ள தரைதளம் மற்றும் கழிப்பிடம் தரைதளம் மிகவும் சேதமடைந்து உள்ளது. அவ்வறையின் முன்பக்கம் உள்ள ramp பழுதடைந்து உள்ளதால் அதற்கான பழுது மற்றும் பராமரிப்பு பணி. | ரூ.1.90/- | திருவாளர். K.வெங்கடேசலு | 0.45% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | திருவாளர். G.ராஜேஷ் | 1.64% மதிப்பீட்டை விட அதிகம் |
| 9 | செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் எதிர்வரும் வடகிழக்கு பருவமழையை கருத்தில் கொண்டு வெள்ள பாதிப்பு பகுதிகளில் தூர்வாரும் பணி . | ரூ.18.00/- | திருவாளர்.MSD Construction | 0.04% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | திருவாளர். G.ராஜேஷ் | 1.47% மதிப்பீட்டை விட அதிகம் |
| 10 | செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 21-ல் ராமபாளையம் சுடுகாடு முன்புறம், ராமபாளையம் MCC அருகே முன்பக்க சுற்றுச்சுவர் மற்றும் கதவு அமைக்கும் பணி. | ரூ.5.00/- | திருவாளர்.MSD Construction | 0.01% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | திருவாளர். G.ராஜேஷ் | 1.16% மதிப்பீட்டை விட அதிகம் |
| 11 | செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.18ல் மழைநீர் வடிகால் அமைத்தல் பணி. | ரூ.9.20/- | திருவாளர். K.வெங்கடேசலு | 0.08% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | திருவாளர். G.ராஜேஷ் | 0.25% மதிப்பீட்டை விட அதிகம் |

பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவாக வழங்கிய ஒப்பந்ததாரர்களுக்கு பணி உத்திரவு வழங்க ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.951/2023/இ1

**தீர்மான எண்.183 நாள்.14.09.2023**

அலுவலக குறிப்பு அனுமதி அளிக்கப்பட்டது.

**பொருள் எண்–31**

